REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 4௳ வியாழன் (19—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 5௳ வெள்ளி (20—7—56) [இதழ் 30

விற்பனை வரி அதிகாரிகளின் அதிகாரம்

குறைக்குமாறு தனிக் குழு சிபாரிசு

"வர்த்தகர்களின் வரவு—செலவுக் கணக்குப் புத்தகங்களைக் கைப்பற்றவும், சாமான்கள் ஏற்றப்பட்டுள்ள வண்டிகளை நிறுத்தி, அவற்றில் ஏற்றப்பட்டுள்ள பொருள்களைச் சோதனை செய்யவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கும் பிரிவை தற்காலிக ஏற்பாடாக நீக்கிவிட வேண்டும்" என்று சென்னை விற்பனை வரி 3-வது திருத்த மசோதாவைப் பரிசீலனை செய்த தனிக் குழு, தான் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளது.

தமிழ் நாட்டின் கோரிக்கை நிராகரிப்பு!

இந்தியைத் திணித்துவிட முடிவு

ஆங்கிலம் நீடிக்கக் கூடாதாம்!

நீதிமன்றங்களிலும் இந்தி புகுத்தப்படுமாம்

வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் விருப்பத்தை இந்தித் திணிப்புக்குழு பூர்த்தி செய்கிறது?

வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்தியை இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரே ஆட்சிமொழியாக்கி, அதன்மூலம், 'இந்தியா' என்ற ஏக இந்திய அரசியல் அமைப்பை நிலைபெறச் செய்துவிட எண்ணி அதற்கான நடவடிக்கைகளில் முனைந்து நிற்பது யாவரும் அறிந்த ஒன்றே!

அவர்கள் 'ஆட்சி மொழிக்குழு' என்ற பெயரால், இந்தியைத் திணிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய ஒரு குழு நியமித்ததும் அது சீக்கிரமே, தன் 'ததாஸ்தை' சமர்ப்பிக்கப் போவதும் தெரிந்ததுதான்!

அந்தக் குழுவினரில் பெரும்பான்மையினர், 'இந்தியை 1965 முதலே ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அமர்த்திவிட வேண்டும்' என்று கருதுகின்றனராம்!

இந்தி கூடாது; ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக—ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்ற தமிழ் நாட்டின் கோரிக்கையை ஏறெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது!

இந்தி திணிக்கப்படும் காலத்தையேனும் நீடிக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற தென்னாட்டைச் சேர்ந்த ஒரு சாராரின் கோரிக்கையைக்கூட அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ள மறுத்து விட்டனராம்!

ஆங்கிலம், சிறிது நாளைக்கேனும் நீடிக்க வேண்டும் என்றால், அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவை இல்லை என்றும், இப்போதுள்ள சட்டத்தில், 343-வது விதியின்படி, 1965-க்குப் பிறகும் ஆங்கிலத்தை உபயோகப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனராம்!

குழுவில் உள்ள சிலர் — சிறுபான்மையினர், இந்தக் கருத்தை ஏற்கவில்லையாம்!

பெரும்பான்மை உறுப்பினர்கள், வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியாளரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் வகையில், 1965-க்குள், ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தியை அமர்த்துவதற்கான வழிவகைகளை மட்டுமே தீவிரமாக ஆராய்ந்திருக்கின்றனராம்!

நீதிமன்றங்களிலும், உயர்நீதி மன்றங்களிலும்கூட இந்தியையே உபயோகிப்பதற்கான வழிவகைகள்—[illegible]கள் இப்போதே மேற்கொள்ளப்பட வேண்டும் [illegible] அவர்கள் கூறுகின்றனராம!

கேட்டீரா, சேதி!

கூலி ஆட்கள் முதல் காரியதரிசி வரை ஒரேவிகித ஊதியம்

மதுபானி, ஜூலை 19—

காரியதரிசியிலிருந்து கூலியாட்கள் வரையில், இனி ஒரேவிகித ஊதியம் அ. இ. கதர்—கிராமோதயச் சங்கத்தின் பீகார் கிளை ஊழியர்களுக்குத் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாம்!

1956 ஏப்ரல் முதல் இம்முடிவு அமுலாகும்; எவருக்கும் ரூ. 100-க்கு மேல் ஊதியம் தரப்படமாட்டாது ஒரு ஊழியருக்கு முதல் இரண்டாண்டுகளுக்கு மாதம் 60 வீதமும், அடுத்த இரண்டாண்டுகளுக்கு ரூ. 75 வீதமும், அதற்குப் பிறகு ரூ 100 வீதமும் வழங்கப்படும்.

இந்தித் திணிப்புக் குழு!

தென்னாட்டில் வெகு உற்சாகமாக வரவேற்கப்பட்டதாம்!

டில்லி மந்திரியின் அண்டப்புளுகு

புதுடில்லி, ஜூலை 18—

இந்தியப் பேரரசு நியமித்த 'இந்திய ஆட்சி மொழிக் குழு' என்ற இந்தித் திணிப்புக் குழு, தனது அறிக்கையை இந்தத் திங்கள் இறுதியில் தாக்கல் செய்யும்' என்று உதவி உள்நாட்டு அமைச்சர் பி. என். தத்தார், மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

"இந்தக் குழுவினர், பல மாநிலங்களில் பகிஷ்கரிக்கப்பட்டது உண்மைதானே! பகிஷ்கரித்தவர்களின் கருத்தை உணர்ந்து கொள்ள சர்க்கார் முயற்சிக்குமா?"

என்று, தோழர் வீராசாமி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

"உறுப்பினர் கூறுவது சரியல்ல; தென்னாட்டில்கூட, குழுவினர் உற்சாகத்தோடு வரவேற்கப் பட்டிருக்கின்றனர்,"

என்று, அமைச்சர் தத்தார் பதில் கூறினாராம்.

"குழுவின் அறிக்கை வெளியிடப்படவிருப்பதை ஒட்டி, சில மாநிலங்களில் தோன்றியுள்ள சலசலப்பு பற்றி சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்கார், அவை பற்றிய பத்திரிகைக் குறிப்புகளைக் கண்டனரா?"

என்று, வேறொரு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார்.

தத்தார் பதில் தரும்போது, 'எங்கும் சலசலப்பு இருக்கத் தேவை இல்லை; குழுவின் அறிக்கை வரும்வரையில் நீங்கள் காத்திருக்கலாம்,' என்று கூறியிருக்கிறார்.

'கடன் வாங்குவதில் பாரபட்சம் காட்டுவதில்லை'

வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுவது பற்றி மக்கள் சபையில் விளக்கம்

புதுடில்லி, ஜூலை 18—

"தனது அபிவிருத்தித் திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவி பெறுவதில், உதவி அளிக்கும் நாடுகளிடையே, ஒன்றுக்கொன்று இந்தியா வேறுபாடு காட்டுவதில்லை,"

என்று, மக்கள் சபையில் [illegible] விக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி ஒன்றி[illegible] பதிலாக இந்தத் தகவ[illegible]த்த உதவி நிதி [illegible] ஆர். பகத், 'நாம் [illegible] நிபந்தனைகள் எதும் இல்லாது, நட்புறவு கொண்ட நாடுகள் வழங்கும் கடன்களை ஏற்றுக் கொள்கிறோம்' என்றும் கூறியிருக்கிறார்.

"எந்தவித நிபந்தனையுமின்றி எந்த நாடு கடன் தந்தாலும் சர்க்கார் பெற்றுக் கொள்கிறதா? அல்லது, அரசியல் அல்லது வேறு அடிப்படையில், கடன் வழங்கும் நாடுகளிடையே [illegible] பா[illegible]றதா?"

[illegible] எச். வி. காமத் கேள்வி எழுப்பினார்.

பதிலளிக்கையில் மந்திரி குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவின் இரண்டாம் திட்டத்திற்காக இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் நமக்குக் கடன் வழங்கி வருகின்றன; அபிவிருத்தித் திட்டங்களுக்கான பொருள்களை வாங்கிக்கொள்வதற்கென அமெரிக்கா நமக்கு ரூ. 40 கோடி ஒதுக்கியுள்ளது.

"ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கடன் திருப்பி தரப்படுவது என்ற முறையில், 40 ஆண்டுக் காலத்திற்குள் இது திருப்பித்தரப்படவேண்டும். இதற்கு வட்டி விகிதம், ரூபாயாகத் தந்தால் 4 சதவிகிதம்; டாலராகத் தந்தால் மூன்று சதவிகிதம்—என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

"துர்காபூர் உருக்குத் தொழிற்சாலைக்காகப் பிரிட்டிஷ் சர்க்கார் ரூ. 20 கோடி கடன் தருவதாகக் கூறியிருக்கின்றனர்.

"பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்காக, ரஷ்யா ரூ. 63 கோடி தருவதாகக் கூறியிருக்கிறது.

"எனவே, ஒரு நாட்டுக்கு ஒரு நாடு நாம் வேறுபாடு காட்டுவதாகக் கூறுவதற்கில்லை."

அரிசி விலை உயர்வு

தடுப்பது பற்றி சென்னை சர்க்கார் ஆலோசனை?

சென்னை, ஜூலை 19—

வேகமான அளவில் சென்னை மாநிலத்தில் உயர்ந்து கொண்டிருக்கும் அரிசி விலையைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருகிறதாம்!

விலை உயர்வுகள்!

அதிகமென்றுகூற இயலாதாம்!

"கடந்த நான்கு மாத காலமாக உணவுப்பொருள் விலைவாசிகள் உயர்ந்துகொண்டிருப்பது உண்மையேயாகும்; ஆனால், கொரியா போர் காலத்தையும், அதற்கும் முந்திய காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், விலைவாசி உயர்வுகளை அதிகமென்று கூற முடியாது,"

என்று, மக்கள் சபையில், மத்திய நிலவரி அமைச்சர் கூறியுள்ளார்.

உண்மைதானா?

புதுடில்லி, ஜூலை 19—

மைசூர் முதலமைச்சரை விலக்க வேண்டுமென்று அதிக எண்ணிக்கையில் சட்டசபை உறுப்பினர்கள் விரும்புவதால், அக்கோரிக்கைக்கு இணங்கவேண்டியதுதான் என்று காங்கிரஸ் மேலிடம் கருதுவதாக நிலைமையறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர் என்று, பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

அந்தத் தொகை எவ்வளவு தெரியுமா?

நாகபுரி ஜூலை 18—

1954 முடிய மூன்று ஆண்டுகளில், இந்தியாவிலுள்ள கிருத்துவ 'மிஷன்'களுக்கு அயல் நாடுகளிலிருந்து சுமார் ரூ. 30 கோடி வந்திருக்கிறதாம்!

அமெரிக்காவிலிருந்து மட்டும் சுமார் ரூ. 24 கோடி வந்திருக்கிறதென்று நியோகி குழு கூறியிருக்கிறது.

கைத்தறியாளரை தெருவில் நிறுத்தும் டெல்லியின் திட்டம்!

எதிர்ப்புக் காட்டிய மந்திரி என்ன பதில் கூறப்போகிறார்?

விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு சென்னை சர்க்கார் தலையாட்டிவிடுமா?

சென்னை, ஜூலை 18—

கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளைப் புகுத்துவது என்ற டில்லியின் கொள்கைக்குத் துவக்கத்தில் எதிர்ப்புக் காட்டி வந்த சென்னை சர்க்கார், இப்போது வேறு எல்லா விவகாரங்களில் நடந்துகொள்ளும் வழக்கம்போல, 'தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்,' என்று கூறிவிடுவார்களா? சீக்கிரமே, முடிவு தெரியவிருக்கிறது!

தங்கள் முடிவு குறித்து உடனடியாகப் பதில் எழுதுமாறு இந்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறார்களாம்!

சென்னை சர்க்கார் என்ன பதில் கூறுவர் என்பது, சீக்கிரம் தெரியுமாம்!

20 கோடி கெஜம் துணி நெய்வதற்காக 35,000 விசைத்தறிகளை இந்தியா முழுவதிலுமாக நிறுவுவது என்ற மத்திய சர்க்காரின் திட்டத்தை, சென்னை முன்பு எதிர்த்து வந்தது; நிதி அமைச்சர் சுப்பிரமணியம் எதிர்ப்புக் காட்டி வந்தார். இப்போது அண்மையில் மத்திய வர்த்தக தொழில், இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னைக்கு வந்து போனதின் விளைவாக, சுப்பிரமணியம், டில்லிக்கு தலையாட்டிவிட முடிவு செய்துவிட்டார்-தனது எதிர்ப்பை ஒளித்துவிடுவார் என்று கூறப்படுகிறது.

என்ன ஆகும் என்பது சீக்கிரமே தெரியவரும்!

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—7—'56 வியாழன்

துரோகிப் பட்டம்!

மாநில புது அமைப்பு மசோதாவை ஆராய்ந்து திருத்தங்கள் செய்ய மக்கள் சபையினல் நியமிக்கப்பட்ட கூட்டுப் பொறுக்குக் குழு, தனது அறிக்கையைத் தந்திருக்கிறது. அதன் அறிக்கையோடு சேர்த்து, மசோதா, ஜூலை 24-ம் நாள் முதல் மக்கள் சபையில் விவாதிக்கப்படவிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக பொறுக்குக் குழுவின் அறிக்கையைப் பரிசீலிக்கும்போது, குழுவினர் மசோதாவின் கர்த்தாக்களான சர்க்காருக்கு 'ததாஸ்து' பாடியிருக்கின்றனர் என்றே சொல்லவேண்டும்.

பம்பாய் போன்ற சில முக்கியமான பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள், ஆட்சேபக் குறிப்புகள் வரைந்திருக்கின்றனர் என்பதைத் தவிர, பிரதேச வாரியாக மக்கள், ஒருமுகமாக நின்று எழுப்பிய குரல்களைக் கணக்கிலெடுத்து, சீர்தூக்கிப் பார்த்து, மசோதாவில் உரிய திருத்தங்களைச் செய்வதற்குப் பொறுக்குக் குழுவினர் திறந்த மனதுடன் முயற்சித்திருப்பதாகக் கொள்வதற்கில்லை.

பொறுக்குக் குழுவின் அமைப்பே, விசித்திரமானதாக இருந்திருக்கிறது.

பீகார்—மேற்கு வங்க மாநிலங்களுக்கான நிலமாற்ற மசோதாவை மக்கள் சபையில் இரண்டு நாட்களுக்கு முன்பு தாக்கல் செய்த உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், 'இந்த மசோதா இரண்டு மாநிலங்களுக்கு மட்டுமே தொடர்புடையது என்பதால், மசோதாவைப் பரிசீலிப்பதற்காகக் கூட்டுப் பொறுக்குக் குழு நியமிக்கப்படுமானல், அந்தப் பொறுக்குக் குழுவில், அந்த இரு மாநிலங்களின் பிரதிநிதிகளே பெருவாரியாக இருக்க வேண்டும் என்று அந்த மாநிலத்தவர் விரும்பக் கூடும்' என்று பேசியிருக்கிறார்.

இந்தியா முழுமைக்குமான மாநிலப் புது அமைப்பு மசோதாவினைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்ட பொறுக்குக் குழுவிலும், தங்கள் தங்கள் மாநிலத்தவர் இருத்தல் அவசியம் என்ற விருப்பம் மக்களிடையே இருந்தது என்பதை, பண்டித பந்த் உணர்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தையே, மேற்கண்ட அவரது பேச்சு உறுதி செய்கிறது. உணர்ந்திருந்தும், விரிவானதொரு பொறுக்குக் குழு அமைப்பதற்கு அவர் சார்ந்துள்ள சர்க்கார் முன்வராது போனது, தாங்கள் தயாரித்த மசோதாவிற்கு ஜனநாயகபூர்வமான திருத்தங்கள் வரக்கூடாது என்று அவர்கள் கருதியிருத்தல் வேண்டும் என்ற யூகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது.

பொதுவாகவே இது போன்று அமைக்கப்படும் கூட்டுப் பொறுக்குக் குழுக்கள், இந்திய அரசியலைப் பொறுத்த மட்டில் வெறும் கண்துடைப்பாகவே இருந்துவருகிறது என்ற குற்றச்சாட்டிற்கு, இக்குழுவினர் தந்த அறிக்கை மேலும் ஆக்கந்தருவதாக அமைந்துள்ளது.

பம்பாய் நகரின் எதிர்காலம் பற்றிய இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் எதேச்சாதிகார முடிவை, கூட்டுப் பொறுக்குக் குழு மாற்றுவதற்கு முன்வராதுபோன செயல் ஒன்றே அவர்களது நாணயத்திற்கு உரைகல்லாக அமையும் என்றால், அது மிகையாகாது. தெளிவாகக் கண்ணை உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நியாயத்தை நிலைநாட்ட முயற்சிக்காதுபோன குழு, தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய வேறு நியாயங்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லைதான்!

தமிழகத்தைப் பொறுத்த வரையில், கூட்டுப் பொறுக்குக் குழுவினர், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருப்போரின் கருத்துக்கு மட்டுமே தலை வணங்கிவிட்டு, பெரும்பான்மை மக்களின் ஒருமுகப்பட்ட கருத்தை மதிக்க மறுத்திருக்கின்றனர்.

'ஆந்திரப் பிரதேசம்' என்று புதிய பெயர்தர முன்வந்த குழு, சென்னைக்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்ற தமிழ் மக்களின் விருப்பத்திற்குச் சம்மதம்தர மறுத்துவிட்டிருப்பது, வருந்தற்குரியதாகும்.

'பச்சைத் தமிழர்கள்' என்ற சிறப்புப் பெயரோடு உலவும் 'தமிழர்'களுக்கே, தங்கள் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்ற உணர்ச்சி மரத்துப் போய்விட்ட[illegible] [illegible]மைக்க முழுக்க வடநாட்டவா[illegible] குழுவிற்கு அந்த எண்ணம் ஏற்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கக் கூடாதுதான்.

ஆந்திராவிற்கும்— மைசூருக்கும் இடையே பீடார் மாவட்டப் பகுதிகளுக்காகவும், ஆந்திராவிற்கும் —மராட்டியத்திற்கும் இடையே அடிலாபாத், நாந்தெத் மாவட்டங்களின் பகுதிகளுக்காகவும் உள்ள எல்லைத் தகராறுகள் குறித்துக் கவலை எடுத்துக்கொண்டு திருத்தங்கள் செய்திருக்கிற பொறுக்குக் குழுவினர், தமிழகத்திற்கும்—கேரளத்திற்கும் இடையேயும், தமிழகத்திற்கும்—ஆந்திரத்திற்கும் இடையேயுமுள்ள எல்லைத் தகராறுகள் பற்றிக் கிஞ்சிற்றும் அக்கரை காட்டாது போனது ஏனே தெரியவில்லை? பொறுக்குக் குழுவில் உண்மைத் தமிழர் எவரும் இல்லாது போனதின் விளைவுதானே, என்னவோ? தமிழர் இருந்திருந்தாலும், அவர்காங்கிரசுக்கட்சிக்காரராக இருந்ததால், அவர், தான் ஒரு தமிழன் என்பதையேகூட மறந்திருக்கக் கூடும்.

இனி, தமிழர்களின் கோரிக்கைகளை மாநிலப்புது அமைப்பு மசோதாவில் இடம் பெறச் செய்யக்கூடிய வாய்ப்பு, மக்கள் சபையில், தமிழ் நாட்டிலிருந்து சென்றுள்ள தமிழ் உறுப்பினர்கள் முயற்சிக்கக் கூடிய ஏதுக்கள் இருக்கின்றன. அவர்களின் தமிழ் உணர்வை தமிழர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் அருகிலேயே இருக்கிறது.

தமிழர்கள் பொறுத்திருந்து பார்க்கலாம்—மக்கள் சபையில், தமிழ் நாட்டின் பெயரைச் சொல்லி வீற்றிருக்கும் தமிழ் உறுப்பினர் எத்தனை பேர், சென்னை மந்திரிகளைப் போல, 'துரோகிப் பட்டம்' வாங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்பதை!

தென்னாட்டில் தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள்?

தென் பிராந்தியக் குழு சிபாரிசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாம்

சென்னை, ஜூலை 17—

சென்னையில் ஏற்கனவே உள்ள மூன்று தொழிற் கல்வி நிலையங்களையும், கூடூரில் உள்ள நிலையம் ஒன்றையும் அபிவிருத்தி செய்வதெனவும், விசாகப்பட்டணத்தில் ஒரு 'பாலிடெக்னிக்' நிறுவுவதெனவும் தென்பிராந்திய தொழில் நிறுவனக் குழு செய்திருந்த சிபாரிசுகளை, அகில இந்திய தொழிற் கல்விக் குழு ஏற்றுக்கொண்டுவிட்டதாம்.

மேலும், சென்னை பல்கலைக் கழகத்தில், 'கெமிகல் எஞ்சினீயரிங்' கல்விக்கான நான்காண்டு பட்டப் படிப்பிற்கும் அனுமதி தரப்பட்டிருக்கிறதாம்.

உயர்தர தொழில் நுட்பப் பயிற்சிக் கல்வி நிலையங்கள் தென்னாட்டில் நிறுவப்பட வேண்டும் என்ற சிபாரிசும் ஏற்கப்பட்டிருக்கிறதாம்.

விமானிகளுக்குப் பயன் தரும் கருவி!

திருச்சி விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது

கருவியை வரவழைப்பதற்கு ரூ. 50,000 செலவாயிற்றும்!

திருச்சி, ஜூலை 15—

தானே இயங்கும் விமான திசை காட்டும் கருவி யொன்று திருச்சி விமானநிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது இம்மாதிரியான கருவி நம் நாட்டில் ஒன்பது மட்டுமே இருக்கின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், இந்தக் கருவி அமைக்கப்பட்டுள்ளது; இக்கருவியை தருவிக்க ரூ. 50,000 செலவாயிற்றும்!

விமான நிலையத்திற்கு அருகே வரும் விமானங்கள் இருக்கும் திசை, இறங்கவேண்டிய திசை ஆகியவற்றை இந்தக் கருவி தெரிவிக்கும்; 100 மைல் தூரம்வரை இக்கருவியின் பயனை ஒரு விமானி பெறக்கூடுமாம்!

தெரிந்து கொள்ளுங்கள்!

புதுடில்லி, ஜூலை 18—

1956 மே இறுதிவரையில், இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வுப்பு நிதிநிர்வாக நிறுவனம், இடம் [illegible]தோருக்குக் கடனாக ரூ. 10,21[illegible] வழங்கியிருக்கிறது; அதில், மே[illegible] பாகிஸ்தானிலிருந்து வந்தவ[illegible] ரூ. 70,59,000—கிழக்கு பாகி[illegible]லிருந்து வந்தவர்களுக்கு ரூ 3,12,05,000 கொடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மொத்தம் அந்த நிர்வாக நிறுவனத்தால், ரூ. 12,57,48,000 கடனாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

1956 மே இறுதிவரையில், அந்த நிர்வாக நிறுவனத்துக்குக் கடன் கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மொத்தம 87,353; அவைகளில் 72,230 மனுக்கள் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன.

'பம்பாய் மராட்டியத்துடன்தான் இணைய வேண்டும்'

'அமைதி ஏற்பட ஐந்தாண்டுகள் தேவை இல்லை'

பொறுக்குக் குழு உறுப்பினர்கள் ஆட்சேபக் குறிப்பு

புதுடில்லி, ஜூன் 16—

மாநில புது அமைப்பு மசோதாவைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட கூட்டுப் பொறுக்குக் குழு உறுப்பினர்கள் 13 பேர்களில் 6 பேர், 'பம்பாய் உடனடியாக மராட்டியத்துடன் இணைக்கப்பட வேண்டும்' என்பதை வற்புறுத்தி ஆட்சேபக் குறிப்பு எழுதியிருக்கிறார்கள்.

மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் பம்பாய் இருக்க வேண்டுமென்பது ஆபத்தானதோர் முன்மாதிரியாகும் என்றும், பிற்போக்குத்தனமான நடவடிக்கை என்றும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு பம்பாயின் நிலை என்ன என்பது மசோதாவில் தெளிவாக இல்லை என்றும் என் சி. சாட்டர்ஜி குறிப்பு எழுதியிருக்கிறார் எனத் தெரியவருகிறது. மேலும் ஐந்தாண்டுகள் முடிவில், மக்கள் கருத்து எந்த சனநாயக வழியில் அறியப்படும் என்பதும் மசோதாவில் குறிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நியோகிர்கார, தனது குறிப்பில், 'பம்பாய், மராட்டியத்துடன் இணைய வேண்டும் என்பது நியாயமான—தேவையான ஒன்று என்பதால், மத்திய ஆட்சியில் பம்பாய் குறுகிய இடைக்காலத்திற்கு மட்டுமே இருக்க வேண்டும்; அந்தக் கால முடிவில், பம்பாய், தானகவே மராட்டியத்துடன் இணைய வேண்டும்; இதற்கு ஐந்தாண்டுகள் தேவையில்லை,' என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது பம்பாய் மராட்டியத்தின் தலைநகராக இல்லாவிடினும், மராட்டிய மாநில அலுவலகங்களை பம்பாயில் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்; ஏனெனில், அவ்வாறு செய்யாவிட்டால், ஆயிரக்கணக்கான மராட்டிய மக்கள் பம்பாயிலிருந்து குடி பெயர வேண்டிவரும்; மேலும், பின்னர் பம்பாய் மராட்டியத்தின் தலைநகராகும்போது, மீண்டும் அவர்களுக்கு பம்பாயில் இடம் கிடைப்பது கடினமானதாகிவிடும்' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

இராஜஸ்தான் சர்க்கார்

ஊழியர்களுக்குச் சலுகை

பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி

ஜெயப்பூர், ஜூலை 15—

கெஜட் பதிவு பெற்ற—பதிவு பெறாத சர்க்கார் ஊழியர்களில், மாதம் அடிப்படைச் சம்பளம் ரூ. 250—அதற்கும் குறைவாக வாங்குவோரின் குழந்தைகளுக்கு, சர்க்கார் கல்வி நிலையங்களில், எல்லா வகுப்பு 'தர'க் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும் என்று இராஜஸ்தான் மாநில சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்த 1956—57ம் ஆண்டிலிருந்து இந்த உத்தரவு அமுலாகும்.

புதியதுணிக் கொள்கை

துரிதமான நடவடிக்கைகள்

புதுடில்லி, ஜூலை 18—

துணி உற்பத்தியின் புதிய [illegible]க்கையின்படி, 14,600 தானாக இயங்கு[illegible]றிகள் பொருத்தப்படுமாம்!

தொழிலாளர்களைப் பா[illegible] அளவிற்கு, இப்போதுள்ள சில தறிகளைத் தானாக இயங்கும் தறிகளாக மாற்றுவதுபற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனராம்!

தானாக இயங்கும் ஒரு தறியைப் பொருத்துவதற்கு ரூ. 8 000 செலவாகக்கூடுமாம்!

'மோட்டா' ரக துணி உற்பத்திக்கு, தானாக இயங்கும் தறிகள் மிகவும் இலாயக்கானதாம்.

குறைந்த வருமானமுள்ளோருக்கு

குடியிருப்பு வசதி

சென்னை நகரசபை மேலும் நிதி வசதி கோருகிறது

சென்னை நகரில், குறைந்த வருமானமுள்ளவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தருவதற்கு மேற்கொண்டும் ரூ 5 இலட்சம் நிதி ஒதுக்குமாறு சென்னை சர்க்காரை நகரசபை கேட்கும[illegible].

முன்னரே ஐந்து இலட்சம் ரூபாய் நிதி வசதிக்கு இத்திட்டத்தின்கீழ் உறுதியளிக்கப் பட்டிருக்கிறது; 92 வீடுகளை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டம் திருத்தப்படுமா?

மத மாற்றத்தைத் தடுக்க சட்டம் இயற்ற வற்புறுத்தல்

நாகபுரி, ஜூன் 17—

மத்தியப் பிரதேச மாநில சர்க்கார் நியமனம் செய்த கிறித்தவ 'மிஷனரி' வேலை விசாரணைக் குழு, மத மாற்றத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள கிறித்தவ 'மிஷனரி'களைத் திரும்பப் பெற வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது

'இந்தியாவிற்கு அந்நிய நாட்டு 'மிஷனரி'கள் ஏராளமாக வருவது விரும்பத் தக்கதல்ல — இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்; ஒழுங்கற்ற முறையில் நடைபெறும் மத மாற்றத்தைத் தடுப்பதற்கு, அவசியமானல் சட்டம் இயற்ற வேண்டும்' என்றும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி நியோகியின் தலைமையில் நியமிக்கப்பட்ட 6 பேர் கொண்ட குழு குறிப்பிட்டிருக்கிறது.

இக்குழு, 77 இடங்களுக்குச் சென்று, 11,369 பேர்களுடன் தொடர்பு கொண்டது, 375 பேர்களி[illegible]லிருந்து எழுத்துமூலம் அறிக்கைகளைப் பெற்றது; 775 கிராம மக்களைப் பேட்டிகண்டது—என்றெல்லாம் செய்தி தரப்பட்டுள்ளது.

'மதப் பிரச்சார உரிமை இந்தியக் குடிமக்களுக்குத்தான் என்பதையும், நிர்ப்பந்தம் அல்லது [illegible] அல்லது ஒழுங்கற்ற முறை[illegible] மூலம் மத மாற்ற உரிமை கிடையா[illegible]தென்பதையும் விளக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்றும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசுகளின் ஒத்துழைப்பை

டில்லி கேட்கிறது

புதுடில்லி, ஜூலை 16—

"தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டம் வெற்றியுறுவதற்கு மத்திய சர்க்காருடன் மாநில சர்க்கார்கள் ஒத்துழைக்க வேண்டும்" என்று, மத்தியத் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் கேட்டுக் கொண்டுள்ளார்.

"மாநில சர்க்கார்கள் ஒத்துழைத்தாலொழிய, மருத்துவ வசதிகளை பரவலாக்க இயலாது," என்றும் அவர் கூறியுள்ளார்.

"தொழிலாளர்களின் குடும்பத்திற்கும் இத்திட்டம் பரவலாக்கப் பட்டாலொழிய திட்டம் முன்னேறாது; ஆகவே, நாட்டின் நலனை முன்னிட்டு, இத்திட்டம் வெற்றிபெறுவது அவசியமாகும்," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல்ஜீரிய தீவிரவாதிகளின் 'மகத்தான வெற்றி'

சுதந்திர எழுச்சி கொழுந்துவிட்டு எரிகிறது!

இளம் பெண்கள் மூவர் மருத்துவக் கல்லூரிப் படிப்பைத் துறந்தனர் !

விடுதலை வீரர்களுக்கு 'நர்சு'களாகப் பணிபுரிகின்றனர் !

தேசிய விடுதலை இயக்கத்தவர்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தினம் தினம் எண்ணற்ற உயிர்களைப் பலிகொடுத்துக்கொண்டு, வீரம் குன்றாமல்—சளைக்காமல், விடுதலைக்காகப் போராடி வருகின்றனர்.

'பழிக்குப் பழி' என்ற ஆவேசத்தோடு தீவிரவாதிகள், விடுதலை கோருவோரைச் சுட்டு வீழ்த்தும் பிரெஞ்சு இராணுவத்தினர்மீது பாய்ந்து, ஏராளமான உயிர்களைப் பலி கொண்டு பழிவாங்கி வருகின்றனர் என்றும் தெரியவருகிறது

தினந்தோறும் பிரெஞ்சு இராணுவத்திற்கு ஏற்பட்டுவரும் அளவற்ற உயிர்ச்சேதம் பற்றிய விவரங்கள் தரப்படுவதில்லை — செய்தியாக! கொல்லப்பட்ட அல்ஜீரிய விடுதலை இயக்க வீரர்களின் எண்ணிக்கை மட்டும் ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் தரப்படுகிறது.

அல்ஜீரிய விடுதலைக்காக இதுவரையில் பல்லாயிரம் உயிர்கள் பலிபீடத்தில் வதைக்கப்பட்டுவிட்டன என்றாலும், போராட்டம் ஓயவில்லை, ஒழியவில்லை!

கடந்த 15-ந் தேதி மட்டும், பிரெஞ்சு இராணுவத்தினர் 97 - பேர்களைச் சுட்டு வீழ்த்தினராம்—கணக்குத் தரப்பட்டிருக்கிறது!

சந்தேகத்திற்கு உரியவர்கள் என்று கூறி, 1,300 பேர் கைது செய்யப்பட்டார்களாம்; இவர்களில் மூவர் இளம் பெண்களாம்! இவர்கள், மருத்துவக் கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டிருந்த மாணவிகளாம்! போராட்டத்தில் ஈடுபட்டு—தாக்கப்பட்டு—காயம்பட்டு அவதியுறுவோருக்கு உதவுவதற்காக, விடுதலைப் படையில் சேர்ந்து 'நர்சு'களாகப் பணி புரிவதற்காக இவர்கள், கல்லூரிப் படிப்பை உதறித் தள்ளிவிட்டு வந்திருக்கிறார்கள்!

விடுதலைத் தாகம் எப்படிப்பட்டது என்பதற்கு, இணையற்ற எடுத்துக்காட்டு!

மேலும், கடந்த ஞாயிறன்று, பிரெஞ்சு இராணுவத்திற்கு வெடிமருந்துகள், தோட்டாக்கள், துப்பாக்கிகள் முதலியனவற்றையும், மற்றும் உணவுப் பொருள்கள், மருந்துச் சாமான்கள், துணிகள் முதலியனவற்றையும் ஏற்றிவந்த இரயில் ஒன்றை தீமூட்டி, நாசப்படுத்திவிட்டிருக்கின்றனர்; ஆத்திரங்கொண்ட தீவிரவாதிகள்!

இதனால், அந்த இரயில் எஞ்சின், பத்து பெட்டிகள், அவற்றில் இருந்த பொருள்கள் அத்தனையும் எரிந்து சாம்பலானதுடன், சுமார் 8 பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

20 மாத காலமாகப் போராடி வரும் தீவிரவாதிகளுக்கு, இது ஒரு 'மகத்தான வெற்றி' என்று பிரெஞ்சு இராணுவ வட்டாரங்களே வர்ணித்துள்ளனவாம்! 200 கெஜ நீளத்திற்கு இரயில்பாதையும் பாழாயிற்றாம்!

இந்தச் சம்பவத்தின்போது, வானளவு உயர்ந்து கொழுந்துவிட்டெரிந்த சுவாலையில் தேசிய விடுதலைக்கான தீவிரவாதிகளின் சுதந்திர எழுச்சியைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

சேலத்திலா துணித் தொழில் கழகம் ?

நிறுவுவதற்கான முயற்சிகளை மத்திய சர்க்கார் எடுக்கிறதா ?

சேலம், ஜூலை 16—

சேலத்தின் முக்கிய தொழிலான கைத்தறியின் முன்னேற்றத்திற்காக சேலத்தில் துணித் தொழில் கழகம் (டெக்ஸ்டைல் இன்ஸ்டிட்யூட்) ஒன்றை நிறுவ மத்திய சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக நம்பத்தக்க வட்டாரத்திலிருந்து தெரியவருகிறதாம்!

தகவல்கள் தருமாறு சென்னை சர்க்கார் உத்தரவு

காசர்கோடு தாலுகாவுக்கும், மலபார் மாவட்டத்திற்கும் திரு—கொச்சி இலாகாக்களின் தலைவர்கள் சென்று தகவல்கள் சேகரிப்பதற்கு சென்னை சர்க்கார் அனுமதியளித்துள்ளனராம். அவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தருமாறு அப்பகுதிகளிலுள்ள அதிகாரிகளுக்கும் சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனராம்.

தேவநேயப்பாவாணர் அவர்களுக்கு தேநீர் விருந்தும்—பாராட்டும்

சேலம் தமிழ்ப் பேரவையின் சார்பில், சென்ற ஓராண்டாகத் தொல்காப்பிய வகுப்பு நடாத்திய சேலம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பண்டித வித்துவப் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள், அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு வாசகராகச் செல்வது குறித்து, நகராட்சி முன்னாள் தலைவர் இராமலிங்கனார் தலைமையில் 10—7—56 மாலை 5 மணிக்குத் தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் சேலம் கல்லூரியில் நடைபெற்றது.

புலமையாளர் சு. கு. அருணாசலனார் பாராட்டுச் செய்யுள் வாசித்துச்சொற்பொழிவாற்றினார். பாவாணரின் மொழி நூல், சொல்லாராய்ச்சி, தனித் தமிழ்த் தொண்டு இவற்றினைப் பாராட்டி, திருவாளர்கள் எம். வி. சொக்கலிங்கம், ஆசிரியர் நடேச உடையார், நடேசனார், வழக்குரைஞர் பி. எஸ். மாரி, பெரியசாமி, ஆசிரியர் பதுமநாபன், பண்டகர் இராசாராம், பேராசிரியர் கோவிந்தராசன் ஆகியோர் பேசினர்.

தமிழில் பிறமொழி கலத்தல் ஆகாதெனவும், தமிழ்ச் சொல்வளம் பற்றியும் பாவாணர் விளக்கிப் பேசித் தக்கவாறு பதில் கூறினார்.

சேலம் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் தி. வை. சொக்கப்பா நன்றி நவின்றார்.

சேலம் திருவள்ளுவர் கழகம், பழைய மாணவர்—இற்றை மாணவர், கல்லூரி ஆசிரியர் குழு முதலியவற்றின் சார்பிலும் தனித் தனியாகப் பாராட்டு விழாவும், தேநீர் விருந்தும் நான்கு நாட்கள் நடைபெற்றது.

பேராசிரியர் பாவாணர் பதினைந்துக்கு மேல் ஆராய்ச்சி நூல்களும், பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 'சொற்பிறப்பு அகராதி' தொகுக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செல்கிறார்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

மீஞ்சூர் :

15—7—56 மாலை 6 மணியளவில், நினைவு நாள் கூட்டம், தோழர் அ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தங்கசாமி, பி. எஸ். தேவதாஸ், அரசு, வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழியர் சத்தியவாணிமுத்து 'ஜூலை 15' என்பது பற்றி விளக்கியும், மாற்றுக் கட்சியினர் போக்கைக் கண்டித்தும் பேசினார்

பெரியார் நகர் :

15—7—56 மாலை 6 மணிக்கு பெரியார் நகர் கிளை தி. மு கழகப் பணிமனையில், பெங்களூர் மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எம் சி. வில்லவன் கோதை தலைமையில், 'ஜூலை 15'-ம் நாள் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் கோபால், திராவிடமணி, எஸ் வி. பதி, வே. இளஞ்சேரன் ஆகியோர், ஜூலை 15-ல் தி. மு. கழகம் நடத்திய முப்பெரும் போராட்டங்களை விளக்கிப் பேசினர். தோழர் எஸ். ஜே உசேன் நன்றி நவின்றார்.

சூலூர் :

15—7—56 காலை 9 மணிக்கு சூலூரில், கழகச் சார்பில், காலை 9 மணியளவில் ஊர்வலம் நடத்தப்பட்டது; ஊர்வலத்தின் முடிவில் சிறார்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. பின்னர், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் கடந்த கால பணிகள் பற்றியும் வருங்காலத்தில் நாம் பொதுத் தேர்தலில் பங்கு பெறுவது குறித்தும் விளக்கப்பட்டன; இறுதியில், மும்முனைப் போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்டிமேடு :

15—7—56ல், கழகத் தோழர்களடங்கிய ஊர்வலம் நடைபெற்றது. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் இனிப்புப் பண்டம் வழங்கப்பட்டது. கழகத் தோழர்களின் இல்லங்களில் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

குணியமுத்தூர் :

தி. மு. கழகச் சார்பில், நினைவு நாளை ஒட்டி ஊரின் பல பகுதிகளிலும் தோழர் தங்கமாணிக்கம் கழகக் கொடிகள் ஏற்றினர்.

கொடியேற்றுதல்

நினைவு நாளையொட்டி 15-7-56 காலை 7 மணியளவில் சென்னை—21 தி பெ சாலை (வண்ணை) எண் 131, இல்லக் கொடிமரத்தில் தோழர் தி. கு. கரிகாலன் அவர்கள் உதவியாலும், இரா. இளந்தென்றல் முயற்சியாலும் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

ஜப்பானிய முறை சாகுபடியில் !

சென்னை முன்னணியில் நிற்கிறதாம்

புதுடில்லி, ஜூலை 17—

“ஜப்பானிய முறையில் சாகுபடி செய்வதில், சென்னை மாநிலம் தான் இதர மாநிலங்களைவிட முன்னேறியிருக்கிறது,” என்று, மத்திய உணவு இலாகா மந்திரி ஏ. பி. ஜெயின், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மொத்தம் இந்தியாவில் 20 இலட்சம் ஏகரா, ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாயும், அதில் 8 இலட்சம் ஏகர்வரை சென்னை மாநிலத்தில் பயிரிடப்பட்டிருப்பதாயும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இரண்டாம் திட்ட முடிவில் சுமார் 40 இலட்சம் ஏகர்வரை இந்த புதிய நவீன முறையில் சாகுபடி நடைபெறும் என்றும் கூறியிருக்கிறார்.

பருத்தி[illegible]றுமாம்— து[illegible]ற்றுமதியாகுமாம்!

புதுடில்லி, ஜூலை 17—

பர்மாவிடமிருந்து சுமார்30,000 பேல் அமெரிக்கப் பருத்தியைப் பெற்றுக்கொண்டு, சுமார் 2½ கோடி கெசம் துணியைப் பர்மாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யுமாம் !

த. நா ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் சங்கம்

தமிழ்நாடு ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் சங்கத்தின் சென்னைக் கிளையின் உறுப்பினர் கூட்டம், டி. பிச்சை தலைமையில், சென்னை — சிந்தாதிரிப்பேட்டை மாரியம்மன் [illegible] முன், [illegible] 7 மணிக்கு நடைபெற்றது. டால்மியா ஜிப்சம் சுரங்கத்தில் இறந்த கூத்தப் பெருமான் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. தோழர் எம் வடிவேல், 'தொழிற் சங்கமும் தொழிலாளர் கடமையும்' என்னும்பொருள் பற்றிப்பேசினார். கூட்ட இறுதியில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களாவன :—

டால்மியாகாண்ட்ராக்டர்கள்தா. நாராயணசாமி செட்டியார், மருதமுத்து நயனார் ஆகியோர் ஜிப்சத்தை அளந்துகொண்டு 'வவுச்சர் பில்' கொடுக்கவேண்டும்; மூன்று மாதங்களுக்குமுன் ஜிப்சம் கல்லை அளந்துகொண்டு இதுவரை சம்பளம் பட்டுவாடா செய்யாமல் இருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது; 6 கன அடிப் பெட்டியால் அளப்பதற்குப்பதிலாக, 7½ கன அடிப்பெட்டியால் அளக்கும் முறையைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறது; 6 கன அடிப்பெட்டிக்கு 7¾ கன அடிப்பெட்டி கொண்டு அளக்கும் டால்மியா காண்ட்ராக்டர்கள் போக்கின் கொடுமையைப் போக்க இந்திய அரசாங்கம் நேரில் பார்வையிட்டுத் தொழிலாளர்கட்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது; சுரங்கச் சட்டத்தை அமுல் நடத்தாமல், சுரங்க அதிகாரிகளுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருக்கும் இந்தக் கொடுமையை சுரங்க அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் நேரில் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

திருமணங்கள்

13—7—56 காலை சென்னை—சேத்துப்பட்டில் தோழர் வி. முனுசாமி எம். சி. அவர்கள் தலைமையில், தோழர் பி. முனுசாமி—தோழியர் ஆர். இராசாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் கே. எம். கண்ணபிரான், காஞ்சி-கல்யாணசுந்தரன் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

திருச்சி மாவட்டம், முசிரி வட்டம் செவந்தாம்பட்டி கிராமத்தில், தோழர் கே. வி. இரத்தினம்—தோழியர் வள்ளியம்மை திருமணம் தோழர் டி. கே. கும்பையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிங்காரவேலு, கு. பழனியப்பன், இ. பரசுராமன், வை உலகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபக் கூட்டம்

15—7—56 மாலை 6 மணியளவில் சென்னை, வண்ணாரப்பேட்டையில் மறைந்த வள்ளல் திரு. புன்னவனம் (நாடார்) அவர்களின் மறைவு குறித்துத் தோழர் வி. சங்கரன் தலைமையில் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது.

திரு. புன்னவனம் அவர்களின் கொடைத் தன்மைப் பற்றியும், நற்குணங்களைப் பாராட்டியும் தோழர்கள் எஸ். ஆர். சுப்பையா, பி. இராமசாமி, கே. எம். கண்ணபிரான், நமசிவாயம், தங்கராசன், கந்தசாமி, சங்கரலிங்கநாடார் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஆகியோர் பேசினர். திரு புன்னவனம் அவர்களின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனுதாபம்

ஆண்டர்சன்பேட்டை தி. மு கழகக்கிளையின் உறுப்பினரும், சிறந்த சிலம்பு வித்தைக்காரருமான தோழர் பி. அசோகன் தந்தையார் திரு. பொன்னுரங்கம் இயற்கை எய்தியமை குறித்து, அன்னார் குடும்பத்தாருக்கு கிளைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

அம்மையப்பன் தி. மு. கழகத் தோழர் பா செயச் சந்திரன் வாழ்க்கைத் துணைவியார் இயற்கை எய்தியமை குறித்துக் கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நில அதிர்ச்சியால் மக்கள் அச்சம் !

இரங்கூன், ஜூலை 17—

மேல் பர்மாவில், நேற்றிரவு 10 மணிக்கு நில அதிர்ச்சி ஏற்பட்டதென்றும், அதைத் தொடர்ந்து 17 அதிர்ச்சிகள் நிலவியதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

உயிர்—சொத்துக்களின் சேதம் தெரியவில்லையென்றாலும் 29 பேர் மாண்டிருப்பரெனக் கருதப்படுகிறது.

மேலும் அதிர்ச்சிகள் ஏற்படக்கூடுமோ என அஞ்சி, மாந்தலேயிலுள்ள மக்கள் வீட்டுக்கு வெளியே வந்துவிட்டனராம். நகரிலுள்ள பள்ளிகள் கல்லூரிக் கட்டிடங்கள் மிகவும் மோசமாக சேதமடைந்தனவாம்.

கடல் அரிப்பைத் தடுக்க சூரத் அருகே பெரும் சுவர்

பம்பாய் சர்க்கார் எழுப்புகிறது

சூரத், ஜூலை 16—

சூரத் அருகிலுள்ள கடலோர உல்லாசபுரியான மோஸ் எனும் இடத்தை, அரபிக் கடல் நெருங்கி வருவதைத் தடுப்பதற்காகக் கடலோரத்தில் ஒரு பெரும் சுவர் உடனடியாக எழுப்பப்படவிருக்கிறது என்று தெரியவருகிறது.

1,700 அடி நீளத்திற்கு எழுப்பப்படும் இந்தப் பெருஞ் சுவருக்கு, ரூ. 2,08,000 செலவாகுமாம்!

சுமார் 5,000 பேர் வாழும் இந்த மோஸ், அண்மையில் ஏற்பட்டு வரும் பேரலைகளுக்கு இரையாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு வருகிறதாம்.

இந்தச் சுவர் எழுப்புவதற்கான அங்கீகாரம், தந்தி மூலமாக சர்க்காரால் வழங்கப்பட்டதுடன், மிக அவசரமான காரியமாக இதைக் கருதி, சர்க்கார் செயல்பட்டு வருகின்றனராம்.

இதேபோல ஒரு சுவர், மோஸ் அருகில், இரண்டு மைல் தொலைவில் உள்ள பிம்பார் எனும் இடத்திலும் சென்ற ஆண்டு எழுப்பப்பட்டதாம்!

கோலார் தங்க வயலில் கிடைக்கக்கூடிய தங்கத்தின் அளவை நிர்ணயிப்பதற்காக நடைபெறும் விரிவான 'சர்வே' மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் முடிவடைந்துவிடக்கூடுமாம்!

கைத்தறி நெசவாளருக்குப் புதிய காலனித் திட்டம்!

குடியிருப்பு அமைக்க கடன் வசதி

சென்னை, ஜூலை 19—

கைத்தறி நெசவாளருக்கு வீடு கட்டும் காலத் திட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார் அதிக நிதி உதவி அளிக்க முடிவு செய்துள்ளனர்; நிதி உதவி சம்பந்தமான விதிகள் தளர்த்தப்படுகின்றன.

முன்பு சர்க்கார் உத்தேசித்துள்ள திட்டத்தின்படி மூன்றில் ஒரு பங்கை மானியமாகவும், பாதி பங்கை கடனாகவும் பெறலாம் என்றும், மீதச் செலவை நெசவாளர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இருந்தது; பலருக்கு நிதி வசதி இல்லாததினால் இத்திட்டத்தின் பலனை அடைய முடியவில்லை.

இனிமேல் இந்தத் திட்டத்தின் பயனை அடைய விரும்பும் நெசவாளர்களுக்கு, செலவாகும் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், பாக்கி இரண்டு பங்கும் 25 வருடங்களில் எளிதான தவணைகளில் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடனாகவும் அளிக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 4½ சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும்.

வீடு ஒன்றிற்கு ரூ. 3,000 முதல் ரூ. 3,600 செலவாகும் என்று தற்சமயம் மதிப்பிடப்படுகிறது.

வீடு கட்டும் மொத்தச் செலவைக் குறைக்க கூடுமானவரையில் இலவச உழைப்பு அளிக்கும்படி நெசவாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர் என்றும் தெரிகிறது.

கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கே இவ்வசதி கிடைக்கும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின்கீழ், சென்னை மாநிலத்தில், 1000 நெசவாளர்களுக்கு, நான்கு வீடு கட்டும் காலனிகள் ஏற்படும்.

அருப்புக்கோட்டை, அம்மாப்பேட்டை, கள்ளிடைக்குறிச்சி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் 200 வீடுகள் கட்ட சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கோவையருகே மற்றொரு 4-வது காலனி ஏற்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையின் அளவு

புதுடில்லி, ஜூலை 17—

"1956 ஜூன் 30-ந் தேதியுடன் முடிவடைந்த முதல் மூன்று மாதங்களில், ஆஸ்திரேலியாவிலிருந்து 88,500 டன் கோதுமையையும், அமெரிக்காவிலிருந்து 58,400 டன் கோதுமையையும் இந்திய சர்க்கார் இறக்குமதி செய்தது," என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதியான கோதுமையில் கராச்சிக்கு அனுப்பப்பட்ட 9,000 டன் கோதுமையும் சேர்ந்திருக்கிறதாம். இக்கால அளவில் அரிசியோ, இதர தானியங்களோ இறக்குமதி செய்யப்படவில்லையாம்.

கிழக்கு வங்க முஸ்லீம்கள்

அசாமில் குடியேற்றம்

கரீம்கஞ்ச் (அசாம்) ஜூலை 15—

கிழக்கு வங்கத்திலிருந்து சுமார் 3,500 முஸ்லீம்கள், கரீம்கஞ்ச் வழியாக பாகிஸ்தான் 'பாஸ்போர்ட்'களுடன், அசாமிற்குள் நுழைந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

இவர்கள் அனைவரும், கடந்த மூன்று கிழமைகளுக்குள் அசாம் வந்தவர்களாம்!

கிழக்கு வங்கத்தில் அரிசி விலை ஏற்றத்தினால்தான், வழக்கத்திற்கு மாறாக அகதிகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்றும் அகதிகளில் ஒருவர் கூறினாராம்.

பம்பாய் சிக்கலுக்குப் பொதுத் தேர்தலில் முடிவு!

காங்கிரசை சர்வகட்சி சமிதி எதிர்க்கும்

ஸ்ரீராம்பூர், ஜூலை 15—

"வரப்போகும் பொதுத் தேர்தலில், மராட்டிய மாநில சட்டசபைக்கும்—மக்கள் சபைக்கும் உள்ள எல்லா இடங்களிலும், சர்வகட்சியினர் அடங்கிய சம்யுக்த மராட்டிய சமிதி போட்டியிடும்,"

என்று, ஆச்சாரியா பி. கே. ஆத்ரே தெரிவித்திருக்கிறார்.

"'பம்பாய் மராட்டியத்துடன் இணையவேண்டும்' என்ற பிரச்சினையை அடிப்படையாக வைத்து எல்லா இடங்களிலும் காங்கிரசை எதிர்ப்பது என்ற முடிவை சமிதி மேற்கொண்டிருக்கிறது," என்று, அவர் விளக்கம் கூறியிருக்கிறார்.

வெள்ளையர் சிலைகள்

காட்சிசாலைகளில் வைக்குமாறு உத்தரவு

புதுடில்லி, ஜூலை 18—

சென்னை, பம்பாய், உத்தர பிரதேச மாநிலங்களில் உள்ள வெள்ளையாட்சியாளர் சிலைகளைப் பத்திரப்படுத்திக் காட்சிப் பொருளாக வைப்பதற்காகக் காட்சிசாலைகள் துவங்குமாறு, மேற்கண்ட மாநிலங்களுக்கு டில்லி உத்தரவிட்டிருக்கிறதாம்!

மேற்கு வங்க சர்க்கார், 'கல்கத்தாவில் உள்ள விக்டோரியா நினைவு மண்டபத்தில், இந்தச் சிலைகளை வைக்கலாம்' எனத் தாங்களாகவே ஒரு யோசனை வெளியிட்டிருக்கின்றனராம்.

இந்தத் தகவலை, உதவி கல்வி மந்திரி டாக்டர் மனமோகன் தாஸ், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'இந்த- [illegible] வது முக்கியமாக, பொறுத்த விவகாரமாகும்' என்றும் அவர் கூறினாராம்.

கழகக் கூட்டம்

★

புவனகிரி :

வெள்ளாற்று மணற் பரப்பில்

21—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

மணப்பாறை :

பழைய சந்தைத் திடல்

21—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

மா. இளங்கீரன்

பேசுபவர் :

கி. மனோகரன்

★

வேலாயுதம்பாளையம் :

மலைவீதி மைதானத்தில்

21-7-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் :

க. பழனியப்பன்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

வே. கா. ராசு

டி. பி. மூர்த்தி

சென்னை 46-வது வட்ட தி. மு.க. செயற்குழு உறுப்பினர் கூட்டம்

21—7—56 இரவு 9 மணியளவில், கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. அகமழகன் தலைமையில் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

காரைக்குடியில் குறள் விழா

★

காரைக்குடியில், நான்காம் ஆண்டு குறள் விழா 21, 22-7-56 ஆகிய இரண்டு நாட்களிலும் நடைபெறும்.

21—7—56 நிகழ்ச்சிகள் :

காலை 10 மணிக்கு, மீ. சு. உயர்நிலை பள்ளியில், திரு சொ. முருகப்பனார் படத் திறப்பு விழா நடைபெறும். திருவாளர்கள் தி. சுந்தரம், சா. கணேசன், சோம. லெ. இலக்குமணன், மெ. சுந்தரம் ஆகியோர் பங்கு பெறுவர்.

மாலை 5-30 மணிக்கு, காந்தி சதுக்கத்தில், குறள் விழாக் கூட்டம் நடைபெறும். திருவாளர்கள் குன்றக்குடி அடிகளார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், வி. முனுசாமி, எம். பி., கண்ணதாசன், காத்தையன் ஆகியோர் பங்கு பெறுவர்.

இரவு 10-30 மணிக்கு, காந்தி சதுக்கத்தில், இசையரங்கு நடைபெறும்.

* * *

22—7—56 நிகழ்ச்சிகள் :

காலை 10 மணிக்கு, மீ. சு. உயர்நிலைப் பள்ளியில், கவியரங்கம் நடைபெறும். திருவாளர்கள் பி. எ. சுப்பிரமணியனார், முடியரசன், தமிழண்ணல், மெ. சுந்தரம், சாமி பழனியப்பன், பெரி. சிவனடியான், நாவுக்கரசன், பா. மதியரசன், அரு. சோமசுந்தரம் ஆகியோர் பங்கு பெறுவர்.

மாலை 6 மணிக்கு, காந்தி சதுக்கத்தில், குறள் விழாக் கூட்டம் நடைபெறும். திரு. பி. டி. இராசன், அன்று பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், இரா. பொன்னுராசு பங்கு பெறுவர்.

டில்லியின் சண்டித்தனம்

ஆந்திராவுக்குக் கடன்தர மறுப்பு?

டில்லியை வற்புறுத்த ஆந்திர சர்க்கார் முடிவு

சென்னை, ஜூலை 18—

டில்லியிடம் வற்புறுத்திக் கடன் கேட்கப்போவதாக ஆந்திர சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

ஆறு கோடி ரூபாய் வேண்டுமென அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

சாக்குப்போக்குக் கூறித் தட்டிக் கழிக்க நினைக்கும் டில்லியை அவர்கள் வற்புறுத்துவர் என்று தெரியவருகிறது.

நிதி நிலை நெருக்கடியைக் காரணமாகக் காட்டி, ரிசர்வ் பாங்கியினர், 'ஆந்திர சர்க்கார் தங்கள் கோரிக்கையான ஆறு கோடியைக் குறைத்துக்கொள்ள வேண்டும்' என்று கூறுகின்றனராம்! என்றாலும், தொகையைக் குறைக்க மறுத்து ஆந்திர சர்க்கார், டில்லியை வற்புறுத்துவார்கள் எனத் தெரியவருகிறது.

முப்முனைப் போராட்ட நினைவு நாள்

20—7—56 மாலை 6½ மணிக்கு, சென்னை—1, எண் 17, சாலை விநாயகர் கோவில்தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. மு. சீனுவாசன் தலைமையில் 'மும்முனைப் போராட்டம் நினைவு நாள்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு!

28,000 கோடி பிராங்குகள் செலவாகுமென மதிப்பு

பாரிஸ், ஜூலை 18—

அல்ஜீரியா [illegible] போர் நடத்துவதற்கான செலவு [illegible] அடுத்த 18 மாதங்களுக்குள் 3 கடன்கள் எழுப்புவதற்குப் பிரான்ஸ் உத்தேசித்துள்ளதாம்.

அல்ஜீரியப் போருக்காக சுமார் 28,000 கோடி பிராங்குகள் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; வரி உயர்வுகள் மூலம் 8,000 கோடி பிராங்குகள் கிடைக்கும்; கடன்கள் மூலம் 20,000 கோடி பிராங்குகள் எழுப்ப உத்தேசிக்கப்படுகிறது.

அரிசி விலை குறையுமென எதிர்பார்க்கிறார்களாம்!

சென்னை, ஜூலை 18—

சர்க்கார் அரிசியை மணங்கு ரூ. 16 வீதம் வாங்கத் தயாராக இருக்கும் எந்த வியாபாரிக்கும் விற்பனை செய்யும் திட்டத்தை மாநில முழுமையிலும் பரவலாக்குவது பற்றி சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். இந்தத் திட்டம் தற்சமயம் சென்னை நகரில் மட்டுமே அமுலில் உள்ளது.

இந்தத் திட்டம் பரவலாக்கப்பட்டு, பர்மா அரிசியும் வந்து சேர்ந்தால், அரிசி விலை நியாயமான அளவுக்குக் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

ஆட்குறைப்பு இராதென எதிர்பார்க்கிறார்களாம்!

புதுடில்லி, ஜூலை 18—

இந்தியச் சணல் ஆலைகள் சங்கம், சணல் ஆலைகளிலுள்ள தறிகளில் 2½ சதவிகிதத் தறிகளை மூடிவைக்கத் தீர்மானித்திருப்பதாகவும், சர்க்கார் இது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த ஏற்பாட்டினால் ஆட்குறைப்பு நேராது என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மத்திய கனரகத் தொழில் மந்திரி, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

டால்மியா மீதுள்ள மோசடி வழக்கு

சர்க்கார் கைவிட்டுவிட யோசிக்கிறதா?

புதுடில்லி, ஜூலை 18—

"டால்மியா மீதுள்ள வழக்கினை சர்க்கார் தொடர்ந்து நடத்தப் போவதில்லை என்ற வதந்தியில் உண்மை ஏதேனும் உண்டா?" என்று, மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது, ரெவினியூ மந்திரி எம். சி. ஷா அதனை மறுத்துரைத்திருக்கிறார்; 'இந்த வதந்தி ஆதாரமற்றது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"டால்மியா கைது செய்யப்பட்டு பத்து மாதங்கள் ஆகிறது; புலன் விசாரணை நடத்த சர்க்காருக்கு ஏன் இத்தனை காலமாகிறது?"

என்று பெரோஸ் காந்தி கேட்டார்.

இதற்குப் பதிலளிக்கும்போது, மந்திரி குறிப்பிட்டதாவது:—

"இந்த விவகாரத்தில் சுமார் ரூ. 2,20,00,000 [illegible] பட்டிருக்கிறது; [illegible] டால்மியா, பல கம்பெனிகளில் [illegible] உடையவர் [illegible] நாம் அறிந்ததே! இந்த பெரிய தொகையைக் [illegible] தற்கு, விசாரணை நடத்தும் அதிகாரி, இந்த கம்பெனிகளுடைய சிக்கலான கணக்குகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது; வழக்கினை உறுதி செய்வதற்கு, வழக்குத் தொடருமுன், தெளிவான விசாரணை நடத்தப்பட வேண்டுவது அவசியம்."

நகரின் மையத்தில் சாராயம் வடிக்கும் தொழிற்சாலை

பம்பாய் போலீசார் திடுக்கிட்டனர்

பம்பாய், ஜூலை 18—

பம்பாய் நகரின் மையத்தில் ஒரு பெரும் கள்ளச் சாராயக் கிடங்கினைக் கண்டுபிடித்து, போலீசார், சுமார் 2000 பாட்டில் வெளிநாட்டு மது வகைகளைக் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சாராயம் காய்ச்சும் [illegible], நாசிக் நகரில் சர்க்கார் நடத்தும் சாராயத் தொழிற்சாலையைப்போலவே நவீன வசதிகள் அனைத்தும் கொண்டதாக இருந்ததாம்!

இது பல ஆண்டுகளாகவே நகரத்தில் இயங்கிவந்தும், போலீசாருக்கு இப்போதுதான் கண்டுபிடிக்க முடிந்ததாம்!

ஜகாங்கீர் தேசாய் என்ற வெகு பிரபலமான கள்ளமது விற்பனையாளர்தான் இந்தத் தொழிற்சாலையை நடத்துபவராம்!

இந்தக் கிடங்கிலிருந்து போலீசார் மேலும் 2000 காலிபுட்டிகளையும் கைப்பற்றினராம்; இவை சாராயம் நிரப்புவதற்கு 'லேபில்' எல்லாம் ஒட்டி தயாராக வைக்கப்பட்டிருந்தனவாம்.

இந்தியாவில் டெலிபிரிண்டர் தொழிற்சாலை ஏற்படும்?

புதுடில்லி, ஜூலை 18—

இந்தியாவில் டெலிபிரிண்டர்கள் தயாரிப்பதற்காகத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை நிறைவேற்றி வைப்பது சம்பந்தமாய் டெலிபிரிண்டர் தயாரிப்பாளர்களிடமிருந்து விவரமான திட்ட அறிக்கைகள் கோரப்பட்டுள்ளனவாம்.

உங்களுக்குத் தெரியுமா?

1954—55ம் ஆண்டில், இந்தியாவில், 18,30,00,000 பவுண்டு தேயிலை உபயோகிக்கப்பட்டிருக்கிறதாம்! 1954-55ல் தேயிலை சாகுபடி பரப்பளவு 7,89,471 ஏக்கராவாம்!

'உரிமை ஏது' என்கிறார் இந்திய அமைச்சர்!

"தங்கள் பிரதேசங்களைப் பாதுகாத்துத் தங்களிடமே வைத்துக் கொள்வதற்காகப் போராடியவர்களுக்கு, இந்தியா என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுவதற்கு உரிமை ஏது?" என்று, 'டெலிவிஷன்' பேட்டி ஒன்றில், காஷ்மீர் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இந்திய சர்க்கார் மந்திரி வி. கே. கிருஷ்ணமேனன் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.